பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 24 திங்கட்கிழமை 08.03.2021 கதிர் 354

## பருத்தித்துறையில் கொரோனாவால் வயோதிபப் பெண் சாவு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

பருத்தித்துறையில் கொரோனா வைரஸ் தொற்றால் வயோதிபப் பெண்ணொருவர் இன்று உயிரிழந்துள்ளார் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தும்பளை தெற்கைச் சேர்ந்த 75 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகிய நிலையில் சிகிச்சை பெற்ற குறித்த வயோதிபப் பெண் நேற்று வீடு திரும்பியிருந்த நிலையில் இன்று காலை

2

## டிக்கோயாவில் மினி சூறாவளி

### 23 வீடுகளுக்கு சேதம்



நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட டிக்கோயா பட்டல்கலை மேற்பிரிவு தோட்டத்தில் நேற்று மாலை வீசிய மினி சூறாவளி காரணமாக அந்தத் தோட்டத்தில் உள்ள 23 தொடர் மற்றும் தனி குடியிருப்புக்கள் சேதமடைந்துள்ளன.

கடும் காற்று காரணமாக இந்தத் தோட்டத்தில் உள்ள 15ஆம்

2

# அநீதிகளுக்கு சர்வதேச நீதி வேண்டி யாழில் இன்று தீப்பந்தப் போராட்டம்

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் ஏற்பாட்டில்





(எஸ்.நிதர்ஷன்)

இலங்கை அரசால் தமிழ்ப் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு, நீதி வேண்டி சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மாபெரும் தீப்பந்தப்போராட்டம் இன்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழக மற்றும் கிழக்குப் பல்கலைக் கழகம் மாணவர்களால் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் யாழ். நல்லூரில் மேற்படி தீப்பந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

2

## அடாவடியை கைவிடுங்கள்

### துரைமாருக்கு எச்சரிக்கை

பெருந்தோட்ட நிர்வாகிகள் மேற்கொள்ளும் அடாவடித்தனங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடருமேயானால் தோட்ட நிர்வாகிகள் அடிக்கடி ஹற்றன் மல்லிகைப் பூ சந்தியில் தொடர் போராட்டங்களை நடத்த வேண்டி ஏற்படும். அவர்களினால் இதனை எவ்வகையிலும் தவிர்க்க முடியாதுபோகும்.

- இவ்வாறு பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் பதுளைப் பிராந்திய பணியகத்தில் இன்று

2

## அரசிடம் கையளிக்கப்பட்ட எங்கள் உறவுகள் எங்கே?

### முல்லைத்தீவில் கவனவீர்ப்புப் போராட்டம்



முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தொடர் போராட்டம் இன்றுடன் நான்கு ஆண்டுகள் நிறைவடைகின்ற நிலையிலும், சர்வதேச மகளிர் தினத்தையொட்டியும் இன்று மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் முல்லைத்தீவில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு புனித இராஜப்பர் ஆலய முன்றலில் ஆரம்பமான இந்தப்

2

## 2022ஆம் ஆண்டு மார்ச் உள்ளூராட்சித் தேர்தல்?

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

23 மாநகர சபைகள் உட்பட 335 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் கடந்த 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்றது.

குறித்த சபைகளின் பதவிக்காலம் அடுத்த வருடம் ஜனவரியில் முடிவுக்கு வருகின்றது. இந்தநிலையிலேயே தேர்தலை ஏப்ரல் மாதத்துக்குள் அதாவது மார்ச்

2

## 2024இல் ஐ.தே.க. ஆட்சியே மலரும் என ரணில் சபதம்!



ஐக்கிய தேசியக் கட்சியை 2024ஆம் ஆண்டு ஆட்சிக்குக் கொண்டு வருவேன் என்று அக்கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் நகர்வுகள், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை

2

## பொறுப்புக்கூற வேண்டியவர்களே இப்போது கூச்சலிடுகின்றார்கள்!

### சாடுகின்றார் அமைச்சர் சமல்



2015ஆம் ஆண்டு முதல் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெறும் வரை இடம்பெற்ற பல சம்பவங்கள் தொடர்பில் அழுத்தங்களின் காரணமாக பொலிஸாரால் எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. மாவனெல்ல சம்பவம் இடம்பெற்ற போதே உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால்

2

## அடாவடியை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடைபெற்ற ஒன்று கூடல் நிகழ்வொன்றில், கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'ஹற்றன் மல்லிகைப் பூ சந்தி' என்பது தொழிலாளர்களுக்கான வரலாற்றுப் பதிவு பிரதேசமாகும். தொழிலாளர்களுக்கான நியாயப்பூர்வமான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு, அத் தொழிலாளர்களினால் போராட்டங்கள் மேற்கொள்ளப்படும் இடமாகும். அத்தகைய இடத்தில் தோட்ட நிர்வாகிகள் இணைந்து போராட்டமொன்றை நடத்தியிருக்கின்றனர். தொழிலாளர்களுக்கு எதிராகவே இந்தப் போராட்டம் அமைந்துள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்கெதிராக, தோட்ட நிர்வாகங்களினால் கட்டவிழ்த்து விடப்படும் அடாவடித்தனங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து செல்லுமேயானால், அதன் பிரதிபலனை தோட்ட நிர்வாகிகள் விரும்பியோ, விரும்பாமலோ எதிர்கொள்ள வேண்டியே ஏற்படும். தோட்ட நிர்வாகிகள் தொடர்ந்தும் தம்மை திருத்திக்கொள்ளாவிட்டால், 'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்பதற்கமைய தொழிலாளர்களின் எதிர்ப்பை ஏற்றுக் கொண்டேயாக வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிடும்.

பெருந்தோட்டங்களில் தொழிலாளர்கள், தோட்ட நிர்வாகிகள் மத்தியில் பிணக்குகள் ஏற்படுவது சகஜமாகும். இப்பிணக்குகளை தோட்ட மட்டத்தில் நிவர்த்தி செய்ய, தோட்டமட்டத் தலைவர்கள் சுமுக பேச்சுகள் மூலம் முயற்சிப்பர். அந்த முயற்சி பயனளிக்காத பட்சத்தில் தொழிற்சங்கங்களின் தலையீடுகள் இடம்பெறும். இந்தத் தலையீடுகளிலும் பயன் கிடைக்காதுவிட்டால், உதவித் தொழில் ஆணையாளர் அலுவலகம், தொழில் மன்று ஊடாகவே பிரச்சினைகள், பிணக்குகள் தீர்த்து வைக்கப்படும். இவ்வாறான முறைகளின் அடிப்படையிலேயே முன்னெடுப்புக்கள் இடம்பெறும்.

இப்படி முறைகளை, தோட்ட நிர்வாகங்கள் மீறிச் செயற்படுவதாலேயே, பெருந்தோட்டங்களில் அமைதியின்மைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. அண்மைக்காலமாக தோட்ட நிர்வாகங்கள், தோட்டங்களில் ஏற்படுகின்ற சிற் சில பிரச்சினைகள் மற்றும் சிறு பிணக்குகள் ஆகியவற்றுக்கும், பொலிஸ் நிலையங்களை நாடும் புதிய கலாசாரமொன்றை மேற்கொண்டு வருகின்றன. இந்தப் பொலிஸ் நிலையங்கள் ஊடாக, தோட்ட நிர்வாகங்களே பயனடைகின்றன.

பொலிஸாரின் அமோக ஆதரவும், தோட்ட நிர்வாகங்களுக்கு கிடைத்து வருவதோடு, தொழிலாளர்களுக்கெதிரான கடும் நடவடிக்கைகளும் பொலிஸாரினால் முன்வைக்கப்படுகின்றன. இதனால் அப்பாவித் தோட்ட தொழிலாளர்கள் பல்வேறு வகைகளிலும் பெரும் பாதிப்புக்களையும், அசௌகரியங்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளனர்.

இது போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளால், தோட்டத் தொழிலாளர்கள், தோட்ட நிர்வாகங்கள் மீது கடும் அதிருப்தியையும், எதிர்ப்பையும் கொண்டுள்ளனர்.- என்றார்.

## 2024இல் ஐ.தே.க ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு ரணில் விக்கிரமசிங்க வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணை அறிக்கையை ஏற்றுகொள்ளமாட்டேன் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## பொறுப்புக்கூற .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்றிருக்காது. எவ்வாறாயினும் பொறுப்புக் கூற வேண்டியவர்களே தற்போது கூச்சலிடுகின்றனர்.

- இவ்வாறு நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் அரச பாதுகாப்பு, அனர்த்த முகாமைத்துவ, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை மீது 10ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதம் இடம்பெறவுள்ளது. எதிர்க்கட்சியால் இது தொடர்பில் மூன்று நாள்கள் விவாதம் கோரப்பட்டுள்ளது. அரசு அதற்கு தயாராகவுள்ளது. எவ்வாறிருப்பினும் பொறுப்புக்கூற வேண்டியவர்களே தற்போது கூச்சலிட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறு கூச்சலிட்டுக் கொண்டிருப்பவர்கள் தாம் அறிந்தவற்றை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் கூறியிருக்கலாம். அவ்வாறின்றி தேவையற்ற கருத்துக்களைக் கூறிக் கொண்டிருப்பது பிரயோசனமற்றது. எவ்வாறிருப்பினும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் நடவடிக்கையைத் தொடர்ந்து முறையாக அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

2015ஆம் ஆண்டு முதல் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெறும் வரை இடம்பெற்ற பல சம்பவங்கள் தொடர்பில் அழுத்தங்களின் காரணமாக பொலிஸாரால் எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. மாவனெல்ல சம்பவம் இடம்பெற்றபோதே உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் இடம்பெற்றிருக்காது. - என்றார்.

## அரசிடம் கையளிக்கப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போராட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் வரை சென்று அங்கு நிறைவடைந்தது .

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் தற்போது நடைபெற்றுவரும் தருணத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கான நீதியை சர்வதேச சமூகம் விரைந்து வழங்க இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்துமாறு கோரியும், இன்று உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வரும் நிலையில் அதனை கறுப்பு மகளிர் தினமாகப் பிரகடனம் செய்தும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் பங்குத்தந்தையர்கள், அரசியல்வாதிகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், சமூகமட்டப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டு கவனவீர்ப்புப் போராட்டத்தை வலுப்படுத்தினர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களால், உலகெல்லாம் பெண்கள் உரிமை பேசும் இந்நாளில் தெருவில் கிடந்து அழ வைத்திருக்கின்றது இந்த அரசு. ஜனாதிபதியே! எமது பிள்ளைகளை நீங்கள் பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது ஒப்படைத்தோம். கால அவகாசம் வேண்டாம் முறையான நீதி விசாரணையே வேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் இணை அனுசரணை வழங்கும் நாடுகள் இலங்கை அரசை சர்வதேச நீதிமன்றத்தில் பாரப்படுத்த ஆதரவு நல்க வேண்டும். கோட்டா அரசே நீ கொண்டு போனவர்கள் எங்கே? இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கு மரணச்சான்றிதழ் தான் பதில் என்றால் கொலையாளி யார்? தெற்கில் சுதந்திரம் வடக்கில் அடக்குமுறை போன்ற வாசகங்களுடன் தமிழ், ஆங்கிலம், சிங்களமொழியிலான நீண்ட பதாதைகளைக் கையில் ஏந்தி கண்ணீருடன் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்களை இராணுவம், புலனாய்வாளர்கள் மற்றும் சிவில் உடை தரித்த பொலிஸார் ஆகியோர் புகைப்படங்களை எடுத்து அச்சுறுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டனர் .

## 2022ஆம் ஆண்டு மார்ச் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாதமளவில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு கலப்பு முறைமையிலேயே உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெற்றது. இதன்மூலம் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதுடன், பெண் பிரதிநிதித்துவமும் கட்டாயமாக்கப்பட்டது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முறைமையில் சில குளறுபடிகள் உள்ளன. இதனால் ஸ்திரமற்ற ஆட்சியும் அமைகின்றது. எனவே, சில திருத்தங்களுக்கு மத்தியிலேயே தேர்தல் இடம்பெறும் எனத் தெரியவருகின்றது.

## அநீதிகளுக்கு சர்வதேச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சர்வதேச மகளிர் தினமான இன்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அக் கட்சியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் எம்.பி., முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## பருத்தித்துறையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்துள்ளார்.

அவர் அண்மையில் சுகயீனம் காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். அங்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. அதையடுத்து அவர் நொச்சியாகம கொரோனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டிருந்தார்.

அதன்பின்னர் அவருடைய குடும்பத்தினரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். அவர்கள் கோப்பாய் கொரோனாத் தடுப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், நொச்சியாகமவில் சேர்க்கப்பட்டிருந்த குறித்த பெண்ணைப் பராமரிப்பதற்கு யாரும் இல்லாத சூழலில் குடும்பத்தார் சேர்க்கப்பட்டிருந்த கோப்பாய் வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்டிருந்தார்.

சிகிச்சை முடிந்து அவருக்குக் கொரோனாத் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டே அவர் நேற்று வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையில் அவர் இன்று காலை உயிரிழந்துள்ளார். கொரோனா இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவர் உயிரிழந்துள்ளார்.

எனினும், இது குறித்து மத்திய சுகாதார நிலையத்துக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர்களின் முடிவின் அடிப்படையில் குறித்த மரணத்தை கொரோனா மரணமாக ஏற்றுக்கொண்டுள்ளோம்.

குறித்த வயோதிபப் பெண்ணின் சடலத்தை யாழ்ப்பாணம் - கோம்பையன்மணல் மயானத்தில் மின் தகனம் செய்யத் தீர்மானித்துள்ளோம் - என்றார்.

## டிக்கோயாவில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலக்கத் தொடர் குடியிருப்பின் கூரை காற்றால் அள்ளுண்டு சென்றுள்ளன. இதனால் இந்தக் குடியிருப்பில் 16 வீடுகளுக்கு மழையால் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன் கூரைத்தகரங்களும் சேதமடைந்துள்ளன.

இதேவேளை, குறித்த பகுதியில் பாரிய மரம் ஒன்று முறிந்து வீடுகளின் மேல் வீழ்ந்ததன் காரணமாக ஒரு வீட்டின் ஒரு பகுதி முற்றாக சேதமடைந்துள்ளதுடன் ஏனைய இரண்டு வீடுகளின் கூரைத்தகடுகள் சேதமடைந்துள்ளன.

இதே பகுதியில் அமைந்துள்ள மற்றுமொரு தொடர்மாடிக் குடியிருப்பில் ஒரு சில வீடுகளின் கூரை சேதமடைந்துள்ளன. குறித்த பகுதியில் சுமார் 50 இற்கும் மேற்பட்ட மரங்கள் மினி சூறாவளி காரணமாக முறிந்து வீழ்ந்துள்ளன

மரங்கள் மின் கம்பிகள் மீது வீழ்ந்து மின் கம்பிகள் மற்றும் வயர்கள் சேதமடைந்ததால் மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளன .

சம்பவ இடத்துக்கு நோர்வூட் பிரதேச சபையின் தலைவர் கே.கே. ரவி, இன்று காலை சமூகம் தந்து பாதிக்கப்பட்ட வீடுகளைப் பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைக்க இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கவனத்துக்குக் கொண்டு வந்து மனித வள அபிவிருத்தி நிதியத்தின் ஊடகச் செய்து கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

**மஞ்சள் கன்று விற்பனைக்கு**
1 1/2 மாத மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு எடுத்து வந்து தரப்படும்.
தொடர்புகளுக்கு 021 492 7778

**இஞ்சி கன்று விற்பனைக்கு**
தரமான இஞ்சி கன்று விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு 021 492 7778

**ஒடியல் மா தேவை**
ஒடியல் மா மொத்தமாக கொள்வனவிற்கு தேவை.
தொடர்புகளுக்கு 076 403 814

**விளம்பரத் தொடர்புகளுக்கு -**
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்- 076 443 8622



# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இனத்தைச் சேரும் இனம்

சில சமயங்களில் களவுகள், மறைப்புகள் செய்வோர் தங்களை அறியாமலேயே அதைக் காட்டிக் கொடுத்து விடுவார்கள். தாம் உணராமலேயே அதனை அம்பலப்படுத்தி விடுவார்கள்.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளரும் முன்னாள் கடற்படைத் தளபதியுமான ஜெய்நாத் கொலம்பகே அப்படி ஒரு விடயத்தில் மாட்டிக் கொண்டிருக்கின்றார். தம்மை அறியாமல் உண்மையை ஒப்புக் கொண்டிருக்கின்றார்.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிராகப் பிரேரிக்கப்பட்டிருக்கும் பிரேரணையை நட்பு நாடுகளின் உதவியுடன் தோற்கடிப்போம் என்று சூளுரைத்த இலங்கை இப்போது அந்த நிலைப்பாட்டிலிருந்து இறங்கி வருகின்றது. வாக்கெடுப்புக்கான நாள்கள் கிட்ட கிட்ட யதார்த்தமாய்ப் பேசத் தொடங்கியிருக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தமக்கிருந்த ஆதரவு நாடுகளின் எண்ணிக்கை பத்திலிருந்து பதினைந்தாக உயர்ந்திருக்கின்றது என்று கொலம்பகே கூறியிருக்கின்றார்.

ஆக, 47 நாடுகளை உறுப்புரிமையாகக் கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் பதினைந்து நாடுகள்தாம் இலங்கையின் பக்கம். எஞ்சிய 32 நாடுகளில் எத்தனை நாடுகள் வெளிப்படையாக இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கும் என்பது மேற்படி பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போதுதான் தெரிய வரும்.

எனினும், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நேரடி அங்கத்துவம் பெறாத நாடுகளையும் உள்ளடக்கி நடைபெற்ற இலங்கை தொடர்பான விவாதத்தின் போது 21 நாடுகள் இலங்கையை ஆதரித்துள்ளன. அவற்றில் பத்து நாடுகளுக்குத்தான் கவுன்ஸிலில் உறுப்புரிமை உள்ளது.

அப்படிப் பகிரங்கமாக இலங்கைக்கு ஆதரவு தெரிவித்த நாடுகளில் ஒரு மேற்கு நாடு கூட இல்லை என்ற உண்மையை இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜெயநாத் கொலம்பகே ஒப்புக் கொண்டுள்ளார்.

அதுவல்ல விடயம். அதற்கு அப்பால் அவர் கூறிய ஓர் அம்சம் தான் கவனிக்கப்பட வேண்டியது.

“கொரோனாத் தொற்றில் உயிரிழப்போரை அடக்கம் செய்யும் விடயத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் எமக்கு இருந்த பத்து வாக்குகளை பதினைந்து வரை அதிகரிக்கச் செய்யும்” என்று உண்மை நிலைமையைப் போட்டுடைத்திருக்கின்றார் அவர்.

இந்த ஒப்புதல் வாக்குமூலம் ஊடாக இரண்டு விடயங்கள் ஓரளவு அம்பலமாகியிருக்கின்றன.

ஒன்று – கொரோனாவால் மரணமடைந்தோரைப் புதைக்க அல்லது நல்லடக்கம் செய்ய அனுமதிப்பதில்லை என்ற தீர்மானம் முழுக்க முழுக்க நிபுணர் குழுவினர் முடிவு, அதில் அரசியல் அல்லது அரச தலைமைத்துவத்தின் தலையீடு இல்லை என்று கொழும்பு கூறி வந்தாலும், சர்வதேச மற்றும் உள்ளூர் அரசியலில் முஸ்லிம் தரப்புகளுடன் பேரம்பேசும் ஒரு துரும்புச் சீட்டாகவே அதனை – அப்பிரச்சினையை – அரசே உருவாக்கிக் கையாண்டு வந்திருக்கின்றது.

இரண்டாவது – முஸ்லிம் அல்லது இஸ்லாமிய நாடுகளின் ஆதரவை ஜெனிவாவில் பெற்றுக் கொள்ளும் தந்திரோபாய மார்க்கமாகவே இப்போதைய கட்டத்தில் அந்தக் கட்டுப்பாடு ஆளும் கட்சியினால் விலக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு விடயங்களையும் இலக்கு வைத்துத்தான் அந்தக் காரியமாற்றப்பட்டது என்பதை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பகிரங்கமாக ஒப்புக் கொள்ளாவிட்டாலும், இப்படி கொரோனால் மரணிப்போரின் உடல்களை நல்லடக்கம் செய்ய அனுமதித்ததன் மூலம் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இஸ்லாமிய நாடுகளின் ஐந்து வாக்குகளைச் சுருட்டக் கூடிய அற்புதமான வாய்ப்புக் கொழும்புக்குக் கிடைத்திருக்கின்றது எனக் கூறுவதன் மூலம், உண்மையைச் சொல்லாமல் சொல்லி ஒப்புக் கொள்கின்றார் வெளிவிவகார அமைச்சின் செயலாளர்.

அதேநேரம், உலகின் மேற்கு நாடுகள் எதுவும் மனித உரிமைகள் விடயத்தில் கொழும்பின் அடாவடிப் போக்குக்கு – அராஜக நடைமுறைப் பண்புக்கு – ஒத்திசையப் போவதில்லை என்ற வலுவான செய்தியும் ஆட்சிப் பீடத்துக்கு நன்கு உணர்த்தப்பட்டிருக்கின்றது என்பது கொலம்பகேயின் கருத்து வெளிப்பாட்டில் தெறித்து நிற்கின்றது.

மனித உரிமை விடயங்களில் மிக மோசமான நடத்தைகளைக் கடந்த காலத்தில் வெளிப்படுத்தி வருகின்ற – அதற்காக நவநாகரிக சமூகத்தினால் வெறுத்து ஒதுக்கப்படுகின்ற – கறுப்புப் பட்டியல் நாடுகளே ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் போன்ற உயர் சபையில் இலங்கைக்கு முதுகு கொடுத்துக் காப்பற்ற முனைகின்றன.

இனம் இனத்தைச் சாரும் என்ற தத்துவத்துக்கு அமைய, மனித உரிமை மீறல்களில் மோசமாக ஈடுபடுகின்ற மிசேத்தனமான ஆட்சி முறைமைகளைக் கொண்ட கொடூர அரசுகளின் நாடுகளே, அதே கொடூரங்களுக்காகக் குற்றம் சுமத்தப்படும் கொழும்பு ஆட்சிப் பீடத்தைக் காப்பாற்ற முனைகின்றன. இலங்கையை அங்கு ஆதரிக்கும் நாடுகளின் பட்டியலில் மேற்கு நாடுகள் ஏதுமில்லை என்பதும் அதனால்தான்.

# சவால்கள் மிக்க இந்த உலகில் அனைத்து பெண்களும் விழிப்புடன் இருக்கவேண்டும்!

## மகளிர் தினச் செய்தியில் பிரதமர் மஹிந்தர்



சவால் மிக்க உலகில் அனைத்துப் பெண்களும் விழிப்புடன் இருக்க வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்திலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ள அவர் –

‘அவள் ஒரு நாடு, ஒரு தேசம், ஓர் உலகம்’ எனும் தொனிப்பொருளில் கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வாழ்த்துக்களை பகிர்ந்துக்கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

உலகில் பெண்களின் உரிமைகளுக்காக ஒரு தினம் கொண்டாடப்பட்டாலும் ஒவ்வொரு தருணமும் பெண்களின் உரிமைகளுக்காக அர்ப்பணிக்கப்பட வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

ஒரு பெண் என்பவள் மகளாக, தாரமாக மற்றும் உலகின் உன்னத பதவியான தாயாகவும் அனைத்து நிலையிலும் நிறைந்திருக்கிறாள். எனவே, பெண்களுக்கு சமூகத்தில் உரிய மரியாதை வழங்கப்பட வேண்டும்.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்தின் ஊடாக பெண்களின் உரிமைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன், அவர்களை தைரியமானவர்களாகப் பலப்படுத்துவது தொடர்பிலும் எப்போதும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஓர் அரசாங்கமாக, பெண்களுக்கு எதிரான வன்முறையையும் பாகுபாட்டையும் நாங்கள் கடுமையாகக் கண்டிக்கிறோம். அவர்களது உயர்வின் மூலமான சமூக நலனுக்கான வாய்ப்புக்களை நாம் ஒரு நாடு என்ற ரீதியில் அனுபவித்து வருகின்றோம்.

வரலாற்றில் விகாரமஹா தேவி முதல் நவீன காலத்தில் உலகின் முதலாவது பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் மூலம் இலங்கை பெண்ணின் வீரமும் தலைமைத்துவமும் உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த செல்வாக்கிற்கு ஏற்ப இந்நாட்டு பெண்கள் இன்று பல்வேறு துறைகளில் தாய் நாட்டில் பல பொறுப்புகளை கொண்டிருப்பது பெருமைக்குரிய விடயமாகும்.

பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பெண்கள் பங்களிப்பு செய்வதை நாம் பாராட்டுகின்றோம். சமுதாயத்தின் மிகச்சிறிய அலகான குடும்பத்தை பாதுகாக்கப் பாடுபடும் பெண், இறுதியாக முழு நாட்டையும் பாதுகாக்கப் பங்களிக்கிறார்.

பல்வேறு காரணங்களுக்காக இன்றுவரை சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பலவாகும். இந்தச் சவால் மிகுந்த உலகில் அனைத்து பெண்களும் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

உங்களுக்கு வெற்றி அல்லது தோல்வி கிட்டுவதும் நன்மை அல்லது தீமை கிடைப்பதும் உங்களது சொந்த எண்ணங்கள் மற்றும் செயற்பாட்டின் அடிப்படையிலாகும்.

எனவே, சவாலைத் தெரிவு செய்யுமாறு அனைத்து பெண்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன். உங்களது சமூகத்தின் பங்களிப்பின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படும் தாய் நாட்டின் எதிர்காலம் மற்றும் அபிவிருத்தியடைந்த உலகை நோக்கி அனைவரும் பார்த்துக்கொண்டிருக்கின்றனர் என்பதையும் நினைவுபடுத்துகின்றேன். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ‘நாடும் தேசமும் உலகமும் அவளே’ தொனிப்பொருளில் மகளிர் தினம்!

## யாழ்ப்பாணத்தில் இன்று நடந்தது



‘நாடும் தேசமும் உலகமும் அவளே’ எனும் தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றன.

இன்று காலை நடை பெற்ற மேற்படி நிகழ்வில் யாழ் மாவட்ட பெண் தொழில் முயற் சியாளர்களது உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெற்றிருந்தது.

மேற்படி நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.முரளிதரன், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 2015 முதல் ஈஸ்டர் தாக்குதல்வரை பல சம்பவங்களில் அழுத்தங்கள்!

## பிரயோகிக்கப்பட்டன என்கிறார் சமல்



ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் நடவடிக்கையை தொடர்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மாவனெல்ல சம்பவம் இடம்பெற்ற போதே உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்றிருக்காது என்றும் அவர் குறிப்பிட்டார்.

2015 ஆம் ஆண்டு முதல் ஈஸ்டர் தாக்குதல் வரை இடம்பெற்ற பல சம்பவங்கள் தொடர்பாக அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டால் பொலிஸாரால் எந்த நடவடிக்கையும் முன்னெடுக்க முடியாமல் போனது என அவர் சுட்டிக்காட்டினார்.

3 நாள் விதத்தை எதிர்க் கட்சி கோரியிருந்தத நிலையில் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை மீது நாடாளுமன்றில் எதிர்வரும் 10 ஆம் திகதி விவாதம் இடம் பெறவுள்ளது.

இந்நிலையில் தாக்குதல் தொடர்பாக ஏதேனும் விவரங்கள் தெரிந்திருந்தால் அவற்றை ஜனாதிபதி ஆணைக்குழுவில் தெரிவித்திருக்க லாம் என்றும் தேவையற்ற கருத்துக்களை கூறிக் கொண்டிருப்பது பிரயோசனமற்றது என்றும் சமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

# டெல்லியில் விவசாயிகளுக்கு ஆதரவாக ஆயிரக்கணக்கான பெண்கள் போராட்டம்



உலக மகளிர் நாளையொட்டி டெல்லி எல்லையில் விவசாயிகளுக்கு ஆதரவாகப் பஞ்சாப், அரியானா மாநிலங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பெண்களும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

புதிய விவசாய சட்டங்களைத் திரும்பப் பெறக் கோரி திக்ரி, சிங்கு, காசிப்பூர் எல்லைகளில் விவசாயிகள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களுக்கு ஆதரவாகப் பல துறைகளைச் சேர்ந்த பெண்களும் போராட்டங்களில் அவ்வப்போது பங்கேற்றனர்.

விவசாயத் துறையிலும் ஆண்களுக்கு நிகராகப் பெண்களின் பங்களிப்பு உள்ளது. இந்நிலையில் உலக மகளிர்நாளையொட்டிப் பஞ்சாப், அரியானா மாநிலங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பெண்கள் டெல்லி எல்லைக்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# பெண்களின் சாதனையால் பெருமை அடைகின்றோம்!

## பிரதமர் மோடி மகளிர் தின வாழ்த்து செய்தி



சர்வதேச மகளிர் தினத்தையொட்டி பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் டுவிட்டர் பக்கத்தில் கூறியிருப்பதாவது:–

சர்வதேச மகளிர் தினத்தன்று எங்கள் அழியாத சக்திகளுக்கு (பெண்கள்) வணக்கம். நம் தேசத்து பெண்களின் பல சாதனைகளால் இந்தியா பெருமை கொள்கிறது. பரந்த அளவிலான துறைகளில் பெண்கள் அதிகாரம் பெறும் வகையில் பணியாற்றுவதற்கான வாய்ப்பை பெற்றது நமது அரசாங்கத்துக்கு கிடைத்த கௌரவம்.

இவ்வாறு மோடி கூறி உள்ளார்.

எதிர்க்கட்சிகள் கடும் அமளி;

# மாநிலங்களவை நாள் முழுவதும் ஒத்திவைப்பு



நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று காலை கூடியது. மாநிலங்களவை காலை நேர அமர்விலும், மக்களவை மாலையும் திட்டமிடப்பட்டு இருந்தது. அதன்படி, இன்று காலை மாநிலங்களவை இன்று காலை கூடியதும் காங்கிரஸ் எம்.பிக்கள் மாநிலங்களவையின் மையப்பகுதிக்குச் சென்று பெற்றோல், டீசல் விலை உயர்வு குறித்து விவாதிக்க வேண்டும் எனவும், மத்திய அரசு இதற்கான விளக்கம் அளிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி கோஷம் எழுப்பினர்.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த மாநிலங்களவைத் தலைவர் வெங்கய்ய நாயுடு, முதல் நாளிலேயே கடுமையான நடவடிக்கைகளை தாம் எடுக்கவிரும்பவில்லை எனக் கூறினார். இதனால், அவையில் அமளி ஏற்பட்டது. இதையடுத்து, அவை 11 மணி வரை கூடியது. பின்னர் அவை கூடியதும், மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே பேசுகையில் – பெற்றோல் விலை 100 ரூபாயை தொட்டு விட்டது. டீசல் விலை 80 ரூபாய்க்கு அதிகமாக விற்கிறது. சமையல் எரிவாயு விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

இதனால் விவசாயிகள், தொழிலாளர்கள் என அனைத்து தரப்பு மக்களும் பாதிக்கப்படுகிறார்கள். பெற்றோல், டீசலுக்கு விதிக்கப்படும் கலால் வரி மூலம் நாடுமுழுவதும் 21 லட்சம் கோடி ரூபா வசூலிக்கப்படுகிறது. இதனை கணிசமாக குறைத்தாலே பெற்றோல், டீசல் விலை குறையும் என்றார்.

இதையடுத்து காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பிக்கள் பெற்றோல், டீசல் விலை உயர்வை கட்டுப்படுத்தக் கோரி தொடர்ந்து கோஷங்களை எழுப்பினர். இதனால் அவையில் அமளி ஏற்பட்டது. இதையடுத்து நண்பகல் 1 மணி வரை அவை ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் மீண்டும் அவை கூடியதும் அமளி நீடித்தது. இதனால், மாநிலங்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, நாளை காலை 11 மணிக்கு மீண்டும் அவை கூடவுள்ளது.

# பட்ஜெட் தொடரின் இரண்டாவது அமர்வு இந்திய நாடாளுமன்றம் இன்று கூடியது



நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி தொடங்கியது. ஆண்டின் முதல் கூட்டத்தொடர் என்ற வகையில் மக்களவை, மாநிலங்களவை கூட்டுக்கூட்டத்தில் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் உரையாற்றினார். இந்த உரையை விவசாயிகள் போராட்டத்தை காரணம் காட்டி 20 க்கும் மேற்பட்ட எதிர்க்கட்சிகள் புறக்கணித்தன.

பெப்ரவரி 1 ஆம் திகதி நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் 2021 - 22 நிதி ஆண்டுக்கான பட்ஜெட்டை மக்களவையில் தாக்கல் செய்தார்.

அதைத் தொடர்ந்து வேளாண் சட்டங்களை வாபஸ் பெறக்கோரி விவசாயிகள் நடத்தி வருகிற போராட்டங்கள் உள்ளிட்ட பிரச்சினைகள் மீது தனி விவாதம் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்னிறுத்தி 4 நாட்கள் நடந்த தொடர் அமளியால் சபை முடங்கியது.

முதல் அமர்வுக்கு பின்னர் மாநிலங்களவை பிப்ரவரி மாதம் 12 ஆம் திகதியும், மக்களவை 13 ஆம் திகதியும் ஒத்திவைக்கப்பட்டன.

இந்த நிலையில் பட்ஜெட் தொடரின் இரண்டாவது அமர்வுக்காக பாராளுமன்றம் இன்று கூடியது.

குஜராத் மாநிலத்தில் இருந்து மாநிலங்களவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பதவியேற்றனர். மாநிலங்களவை எதிர்கட்சி தலைவராக காங்கிரஸ் கட்சியின் மூத்த உறுப்பினர் மல்லிகார்ஜுன கார்கே பொறுப்பேற்றார்.

எதிர்கட்சி தலைவராக பொறுப்பேற்றுள்ள காங்கிரஸ் கட்சியின் மல்லிகார்ஜுன கார்கேவுக்கு துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு வாழ்த்து தெரிவித்தார். கருக்கலைப்பு திருத்த மசோதா உள்ளிட்ட மசோதாக்கள் இன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

# அதிக சத்தத்துடன் வாகனத்தை ஓட்டிய இளைஞர்கள்; தட்டிக்கேட்ட மக்களை தாக்கி வீடு, கடைக்கு தீ வைப்பு!



திருப்பதி அருகே சைலன்சரை கழற்றி விட்டு, அதிக சத்தத்துடன் வாகனத்தை ஓட்டிச் சென்ற இளைஞர்களை பொதுமக்கள் தட்டிக்கேட்டமையால் அவர்களை கற்களை வீசி தாக்கியமையுடன், வீடு, கடைகளுக்கு தீ வைத்ததமையல் பதற்றம் நிலவியது.

தெலங்கானா அடுத்த பைன்சா நகர், சுல்பிகர் காலனியில் தடம் மாறி திரியும் சில இளைஞர்கள் சைலன்சரை கழற்றி விட்டு, காதை கிழிக்கும் சத்தத்துடன், வாகனத்தை ஓட்டி சென்றுள்ளனர். இதனை தட்டிக்கேட்ட அப்பகுதி மக்களை இளைஞர்கள் தாக்கியமையுடன், அங்கே நிறுத்தி வைத்திருந்த 2 ஓட்டோக்கள், ஒரு கார், இரண்டு வாகனங்கள் மற்றும் வீடு, கடைகளுக்கு தீ வைத்தமையால் பதற்றம் நிலவியது.

தகவலறிந்து வந்தபொலிஸர் மற்றும் செய்தியாளர்கள் மீதும் கல் வீசி இளைஞர்கள் தாக்கியதில் 2 அதிகாரிகள், 3 செய்தியாளர்கள், 4 இளைஞர்கள் பலத்த காயமடைந்தனர்.



## சர்வதேச பெண்கள் தினத்தை ஒட்டி சிறப்பு முகப்பை வெளியிட்ட கூகுள்



சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு, சாதனை பெண்களை கௌரவிக்கும் வகையிலான முகப்பை கூகுள் நிறுவனம் உருவாக்கியுள்ளது.

கல்வி, மருத்துவம், கலை, அறிவியல், விண்வெளி, பொறியியல், விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சாதனை படைத்த முதல் பெண்களை நினைவுக்கூறும் விதமாக ஒரு சிறப்பு முகப்பை வெளியிட்டுள்ளது.

அதில் கைக்கோர்த்தபடி சாதனை பெண்களின் கைகள் உயர்ந்து இருப்பது போன்ற அனிமேஷன் காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

## ஈகுவடோரியல் கினியாவில் தாக்குதல் 20 இற்கும் மேற்பட்ட மக்கள் பலியாகினர்

மத்திய ஆபிரிக்க நாடான ஈகுவடோரியல் கினியாவில் வெடிகுண்டு தாக்குதல் நடந்து உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ராணுவ தள பகுதியான பாடா (BATA) நகரத்தில் அதி பயங்கர சத்தத்துடன் வெடிகுண்டு வெடித்த நிலை யில் கட்டடங்கள் மற்றும் வீடுகள் உருக்குலைந்து போய் உள்ளன.

தற்போது வரை குண்டு வெடிப்பு தாக்குதலுக்கான காரணம் தெரிவிக்கப்படாத நிலையில், தாக்குதலில் 20 இற்கும் மேற்பட்ட மக்கள் பலியாகி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மேலும் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தவர்களின் உடல்கள் மீட்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. விண்ணை முட்டும் அளவுக்கு தீ எரிந்த நிலையில் தீயணைப்பு துறையினர் போராடி கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

மேலும் தாக்குதலில் படுகாயமடைந்த மக்களுக்கு அதிகளவிலான இரத்தம் தேவைப்படுவதாக உள்ளூர் மருத்துவமனைகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. படுகாயம் அடைந்த மக்களை கொத்து கொத்தாக லொறிகளில் ஏற்றி மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லும் பணி நடந்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.



## பைடன் நிர்வாகத்துக்கு சீனா அரசு எச்சரிக்கை

சீனாவில் கடந்த 1949 இல் நடந்த உள்நாட்டு போருக்கு பிறகு தீவு நாடான தாய்வான் உருவானது. ஆனாலும் தைவான், சீனாவின் ஒருங்கிணைந்த பகுதி என்றும், தேவைப்பட்டால் தாய்வானை கைப்பற்ற படை பலத்தை பயன்படுத்த தயங்க மாட்டோம் என்றும் சீன அரசு கூறி வருகிறது.

இந்த விவகாரத்தில் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் தலைமையிலான நிர்வாகம் தாய்வானுக்கு ஆதரவாக இருந்து வந்தது. சீனாவின் கடும் எதிர்ப்பையும் மீறி தாய்வானுக்கு அமெரிக்கா இராணுவ ஆயுதங்களை விற்பனை செய்து வந்தது.

இந்த நிலையில் அமெரிக்காவில் தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவி ஏற்றுள்ளார். அவர் தாய்வான் விவகாரத்தில் முந்தைய நிர்வாகத்தின் அதே கொள்கையை கடைப்பிடித்து வருகிறார்.

இதனை கண்டித்துள்ள சீனா, தாய்வானுக்கு ஆதரவு காட்டும் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பின் ஆபத்தான கொள்கையை மாற்றியமைக்க வேண்டுமென தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகத்துக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.



இதுகுறித்து சீன வெளியுறவு மந்திரி வாங்யி கூறுகையில், தாய்வான் பிரச்சினையில் சீன அரசு சமரசம் அல்லது சலுகைகளுக்கு இடமளிக்காது. தாய்வான் பிரச்சினையின் ஆழத்தை முழுமையாக புரிந்துகொள்ள அமெரிக்காவின் புதிய நிர்வாகத்தை கேட்டுக்கொள்கிறோம். மேலும் நெருப்புடன் விளையாடும் முந்தைய நிர்வாகத்தின் அபாயகரமான கொள்கைகளை முற்றிலும் மாற்றியமைக்க வேண்டும் என கூறினார்.

## பாகிஸ்தான் கடற்படை அணிவகுப்பில் துப்பாக்கிச் சூடு; 2 வீரர்கள் உயிரிழப்பு

பாகிஸ்தானின் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ள பலுசிஸ் தான் மாகாணத்தை தனி நாடாக அறிவிக்கக்கோரி 'பலுசிஸ்தான் விடுதலை இயக்கம்' என்கிற அமைப்பு பல ஆண்டுகளாக அந்த நாட்டு இராணுவத்துடன் ஆயுத மோதலில் ஈடுபட்டு வருகிறது.

இந்த அசாதாரண சூழ்நிலையை பயன்படுத்தி அங்கு பல்வேறு பயங்கரவாத இயக்கங்கள் காலூன்றி வருகின்றன.

இவர்கள் பலுசிஸ்தான் மாகாணத்தில் பொலிஸார் மற்றும் இராணுவ வீரர்களை குறி வைத்து தொடர் குண்டு வெடிப்பு மற்றும் துப்பாக்கி சூடு சம்பவங்களை அரங்கேற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் பலுசிஸ் தான் மாகாணத்தின் துறைமுக நகரமான குவாடரில் நேற்று காலை பாகிஸ்தான் கடற்படைக்கு சொந்தமான வாகனங்கள் சாலையில் அணிவகுத்து சென்றன.

அப்போது அங்கு பதுங்கியிருந்த பயங்கரவாதிகள் கடற்படை வாகனம் ஒன்றின் மீது சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தினர். இதனால் அங்கு பெரும் பதற்றமும், பீதியும் உருவானது. என்ன நடக்கிறது என கடற்படை வீரர்கள் சுதாகரிப்பதற்குள் பயங்கரவாதிகள் துப்பாக்கி சூடு நடத்தி விட்டு அங்கிருந்து தப்பி ஓடிவிட் டனர். இந்த துப்பாக்கி சூட்டில் கடற்படை வீரர்கள் 2 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

இந்த தாக்குதலுக்கு உடனடியாக எந்த ஒரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. இதனிடையே தாக்குதல் நடந்த பகுதியில் ராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டு தப்பியோடிய பயங்கரவாதிகளை பிடிப்பதற்கான தேடுதல் வேட்டை முடுக்கிவிடப்பட்டுள்ளது.

## கொரோனா பெருந்தொற்றாக அறிவித்து மார்ச் 11 ஆம் திகதியுடன் ஒரு வருடம்

உலக சுகாதார அமைப்பு கொரோனா வைரஸ் தொற்றை உலக பெருந்தொற்றாக அறிவித்து ஒரு வருடம் ஆகவுள்ளது.

கடந்த வருடம் மார்ச் 11 ஆம் திகதியன்று இந்த அறிவிப்பை உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானம் அறிவித்தார். அப்போது 114 நாடுகளில், 1 லட்சத்து 18 ஆயிரம் பேர் தொற்றால் பாதித்தும், 4 ஆயிரத்து 291 பேர் தொற்றுப் பலியாகியும் இருந்தனர்.

ஆனால் தற்போது, 210 நாடுகளுக்கு பரவி சுமார் 11 கோடியே 60 லட்சத்து 30 ஆயிரம் பேருக்கும் மேற்பட்டோர் தொற்றால் பாதிக்கப்பட்டு உள்ள நிலையில், 27 லட்சத்து 9 ஆயிரத்து 195 பேர் தொற்றால் உயிரிழந்தும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## உலகின் மிகப்பெரிய பேரீச்சை தொழிற்சாலை டுபாயில் அடுத்த ஆண்டு திறக்கப்படவுள்ளது!



டுபாயில் உலகின் மிகப்பெரிய பேரீச்சை தொழிற்சாலை அடுத்த ஆண்டு திறக்கப்படுகின்றது.

இது குறித்து அல் பரக்கா பேரீச்சை நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த புதிய தொழிற்சாலையின் மூலம் அமீரகத்தில் ஒவ்வொரு ஆண்டும் உற்பத்தி செய்யப்படும் பேரீச்சையின் விளைச்சலானது ஒரு லட்சம் தொன்னுக்கும் மேல் அதிகரிக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

6 லட்சம் சதுர அடி பரப்பளவில் உருவாக உள்ள இந்த தொழிற்சாலை சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் தனது பணிகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சவுதியில் எண்ணெய்க் கிணறுகள் மீது தாக்குதல்: பன்னாட்டுச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்வு!



சவுதி அரேபியாவில் எண்ணெய்க் கிணறுகள், சேமிப்புக் கிடங்குகள் மீதான தாக்குதலையடுத்துப் பன்னாட்டுச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை 2 விழுக்காடு உயர்ந்து 70 டொலர் 82 சென்ட்களாக உள்ளது.

சவுதி அரேபியாவில் அரசுக்குச் சொந்தமான அராம்கோ நிறுவனத்தின் எண்ணெய்க் கிணறுகள், சேமிப்புக் கிடங்குகள் மீது ஏமனைச் சேர்ந்த கிளர்ச்சியாளர்கள் ஆளில்லா விமானங்கள், ஏவுகணைகளைக் கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன் எதிரொலியாகப் பன்னாட்டுச் சந்தையில் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை 2 புள்ளி ஒரு விழுக்காடு உயர்ந்து 70 டொலர் 82 சென்ட்களாக உள்ளது.

கச்சா எண்ணெய் விலை 2019 மே மாதத்தில் இருந்த அளவை 20 மாதங்களுக்குப் பின் மீண்டும் எட்டியுள்ளது.

## விமானத் தயாரிப்பு உரிமையாளர் ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழப்பு



பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அரசியல்வாதியும், தொழிலதிபரும், டஸால்ட் விமானத் தயாரிப்பு நிறுவனங்களின் வாரிசுமான ஆலிவர் டஸால் ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்தார்.

அந்நாட்டின் வடக்குப் பகுதிக்கு அவர் சென்று கொண்டிருந்த போது மோசமான வானிலை காரணமாக ஆலிவர் பயணித்த ஹெலிகொப்டர் விழுந்து விபத்துக்குள்ளானது.

இதில் அவரும், விமானியும் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

ஆலிவர் டசால்டின் மறைவுக்கு பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# மன உறுதியில் வலியவள் பெண்

- செல்வி வினாயகமூர்த்தி -



பெண் என்பவள் இந்த தேசத்தை கட்டியமைக்கும் வலிமை கொண்டவள்.ஒரு குடும்பத்தை வழிநடத்தவும் முன்னேற்றவும் அயராது முன்நின்று உழைக்கின்ற மிகப்பெரும் பங்கு பெண் இனத்துக்கே உரியது.

இவ்வுலகில் சீரும் சிறப்பும் வாய்ந்தவர்கள் யாரென்று கேட்டால் அனைவருமே நம்மை ஈன்றெடுத்த தாயாரை தான் கை நீட்டி சுட்டுவோம்.அவ்வாறான பெருமை மிக்க பாலின படைப்பு பெண்களாகும்.மனித குலத்தை ஆரம்பத்தில் வழிநடத்தி சென்றவர்கள் பெண்கள்தான். கருவறை முதல் கல்லறை வரை ஒவ்வொரு மனிதரின் வெற்றிக்கும் தோல்விக்கு பின்னும் ஒரு பெண்ணின் பங்கு நிச்சயம் உண்டு.

மகளிரை தாயாகவும் சகோதரியாகவும் மனைவியாகவும் பாசமிகு மகளாகவும் தமது உறவுக்குள் அடக்கியிருக்கும் ஆண்வழிச்சமுதாயம் அவர்களின் வாழ்வில் தவிர்க்க முடியாத இடத்தில் இருக்கும் பெண்பாலினத்தை உரிய முறையில் நடத்துகின்றோமா? அவர்களுக்கான மதிப்பான இடத்தை வழங்குகின்றோமா?அவர்களுக்கான நியாயமான உரிமையை பெற்றுக்கொள்ள வழியமைத்துக்கொடுக்கின்றோமா? என சிந்திக்கின்ற நாளாக இந்நாள் இருப்பது மட்டுமல்ல பெண்கள் தமது உரிமைகளை வென்றெடுக்கவும் மூட நம்பிக்கைகளை அகற்றவும் அதிக பட்சம் அவர்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற நாளாகவுமே இந்நாள் அமைகின்றது.

அந்தவகையில் ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்டு உலகம் முழுவதும் மார்ச் 8 ஆம்திகதி சர்வதேச மகளீர் தினமாக உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது.மார்ச் 8 ஐ பல நாடுகள் பொது விடுமுறை நாளாக அறிவித்தும் பெண்களுக்கான சமத்துவத்தை போற்றுகின்றது.ஆணாதிக்க சமுதாயத்திலிருந்து பெண்களுக்கான உரிமைகளை வென்றெடுத்த நாளாகவே இந் நாளை கொள்ளமுடியும்.

ஒரு பெண் நினைத்தாள் எதையும் சாதிப்பாள் என்று சொல்வார்கள்.பெண்ணின் வைராக்கியம் ஆணின் உடல் வலிமையைவிட வலியது.அவ்வாறான வலிமை மிக்க பெண்கள் மத்தியில் நடைமுறையில் அவர்களுக்கான பாதுகாப்பும் நியாயமான அங்கீகாரங்களும் நடைமுறையில் சாத்தியமற்ற தன்மை கொண்டதாக காணப்படுவதோடு நாளுக்குநாள் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள் எம்மை அதிர்ச்சியுற வைக்கிறது.சீரும் சிறப்போடும் நடாத்தப்பட வேண்டிய பெண்கள் பல்வேறு வகையான வன்முறைகளுக்கு உள்ளாவது கொடுமையானது.ஆணாதிக்க கட்டமைப்புகளில் சிக்கி ஆண்களின் ஆதிக்க சூழ்ச்சிகளில் அடிமைகளாகவே வாழ்கின்றனர்.இவ்வுலகில் ஏற்படும் எல்லாவிதமான பிரச்சனைகளிலும் அதிகமாக சிக்கப்பட்டு பாதிக்கப்படுபவர்கள் பெண்கள்தான்.அளவற்ற பல்வகையான வன்முறைகளில் பாதிக்கப்படுவதும் பெண்கள் தான்.15 - 45வயதான பெண்களில் மூன்றில் ஒரு பங்கினர் ஏதாவது ஒரு வகையான வன்முறைக்கு ஆளாகுவதுடன் ஒட்டுமொத்த பெண் களில் 35% பேர் உடல் உள ரீதியான வன்முறைக ளுக்கு உள்ளாகின்றனர். 45%பெண்கள் பல்வேறு வகையான வன்முறைகளால் பாதிக்கப்பட்டு பாதுகாப்பற்ற சூழ்நிலையிலே தம் வாழ்வை தொடருகின்றனர்.

அண்மையில் கிளிநொச்சி வட்டகச்சி பகுதியில் குடும்பதகராறு காரணமாக தனது மூன்று குழந்தைகளை கிணற்றில் வீசி தானும் தற்கொலைக்கு முயற்சித்த சம்பவமும் யாழ்பாணம் மணியந்தோட்டம் பகுதியில் தனது ஒன்பது மாதக்குழந்தையை துன்புறுத்திய சம்பவமும் எம் கண் முன்னே நடந்த துர்ப்பாக்கிய சம்பவங்களின் எடுத்துகாட்டுக்களாக முன்னிறுத்தினாலும் நாளுக்கு நாள் குடும்ப தகராறு காரணமாக தற்கொலைகளும் வன்முறைகளும் ஆங்காங்கே இடம்பெறாமலில்லை.

ஐக்கிய நாடுகள் சபையால் உருவாக்கப்பட்ட பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாதொழித்தல் தொடர்பான உடன்படிக்கையில் 1981இல் இலங்கை கைச்சாத்திட்டு பெண்கள் பாராபட்சங்களில் இருந்து பாதுகாப்பு பெறும் உரிமை,அரசியலில் பங்கு பற்றும் உரிமை ,கல்வி கற்கும் உரிமை என பல்வகைப்பட்ட உரிமைகளை பெண்கள் பெற்றிருந்தாலும் அவை எந்தளவிற்கு பெண்களுக்கு சாத்தியப்பாடுகளை தோற்றுவித்துள்ளது என்பது சாத்தியப்பாடுகளின் தன்மையை பொறுத்தே ஆராய்தல் வேண்டும்.

பெண்களுக்கெதிராக நடாத்தப்படும் அனைத்து வன்முறை மீறல்களும் மனித உரிமை மீறல்களே, அத்தகைய மனித உரிமை மீறல்களை செய்யும் நபர்கள் யாராக இருந்தாலும் எந்தப்பதவியில் இருந்தாலும் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும்.பெண்களின் பாதுகாப்பிற்கு உதவிசெய்திடும் வகையில் சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தாலும் அவை சரியான முறையிலும் துரித கதியிலும் இச்சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால் நிச்சயமாக தொடர்ந்து கொண்டிருக்கும் பெண்களுக்கெதிரான பாலியல்,குடும்ப வன்முறைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கலாம்.


## சர்வதேச மகளிர் தினம் மார்ச் - 8

## சமூகத்துக்கான விழிப்புணர்வு

Youth Awareness Movement Sri Lanka

**நாம் வாழப்பிறந்தவர்கள் என்பதை மறந்துவிடவேண்டாம் அன்புறவுகளே!**

- பெண்களின் சக்தி என்பது பெண்களின் ஆன்ம ஆற்றல், அரசியல், சமூக, பொருளாதார மேம்பாடு மற்றும் உடல் உள வலிமை ஆகியவற்றைக் குறிப்பதாகும்.
- பெரும்பாலும், பெண் சக்தி என்பது அவர்களின் தன்னம்பிக்கையையும், ஆற்றலையும் வளர்த்துக் கொள்வதையே சுட்டுகிறது.
  - பெண் சக்தி என்பது பின்வருவனவற்றின் முழுமை அல்லது அவை போன்றன என்று கூறலாம்.
  - சுயமாக முடிவெடுக்கும் உரிமை.
  - சரியான முடிவை எடுக்கத் தேவையான தகவல்களையும், வாய்ப்புகளையும் பெற்றுள்ளமை.
  - 'ஆம்' அல்லது 'இல்லை' என்றும் 'இது அல்லது அது' என்று கூறுவது போல இல்லாமல், தனது முடிவைத் தீர்மானிக்கத் தேவையான பரவலான வாய்ப்புகள்.
  - கூட்டு முடிவு எடுக்கும் சூழலில் தன் கருத்தை உறுதியாக நிலை நிறுத்தும் தன்மை.
  - மாற்றங்களை ஏற்படுத்துவது குறித்து உறுதிமிக்க நேர்மறையான சிந்தனை.
  - தன்னுடைய அல்லது தன் குழுவினுடைய வலிமையைக் அதிகரிக்க தேவையான திறமைகளைக் கற்றுக்கொள்ளும் தன்மை.
  - மற்றவர்களின் எண்ணங்களை அல்லது கருத்துக்களை மாற்ற நேரிடும்போது, ஜனநாயகமான முறையில் மாற்றும் திறன்.
  - சுய முன்னேற்றம் மற்றும் முடிவுகள் எடுக்கும் தருணங்களில் சமுதாய வளர்ச்சியையும் மாற்றங்களையும் கருத்தில் கொள்ளுதல்.
  - ஒருவரது நல்லியல்புகளை அதிகரித்து அவரை ஏற்றுக்கொண்டு சமூகத்துக்குள் இணைத்தல்.

**இத்தனை அறிவுரீதியான தகுதிகளை கொண்ட பெண்கள். சமூகத்தை செதுக்கும் சிற்பிகளே பெண்களின் வாழ்க்கையை அழிவின் விளிம்புக்கு கொண்டுசெல்ல வேண்டாம்.**




**அனைத்துவிதமான பிரச்சினைகளுக்கும் எம்மை அணுகுங்கள்
கரம்கொடுக்கவும், ஆலோசனை வழங்கவும் காத்திருக்கின்றோம்.
(இரகசியம் பேணப்படும்)**

**தொடர்புகளுக்கு -
திருமதி. ப .காயத்திரி - செயலாளர்,
இலங்கை இளையோர் விழிப்புணர்வு இயக்கம்.
யாழ்ப்பாணம் .
தொலைபேசி - 0774135036**

# ஒரு நாடு பெண்களை நடத்துகின்ற விதம் உண்மையான வளர்ச்சியின் சமூக குறிகாட்டி!

## மகளிர் தின வாழ்த்தில் ஜனாதிபதி



ஒரு நாடு பெண்களை நடத்தும் விதம் அதன் உண்மையான வளர்ச்சியின் சமூக குறிகாட்டியாகும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மகளிர் தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச்செய்தியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ள அவர் -

இலங்கை சமூகம் பெண்களையும் தாய், சகோதரி, மகள், மனைவி மற்றும் இல்லத்தரசி என்ற அவர்களது பல்வகைப் பட்ட வகிபங்கையும் பண்டைய காலம் முதலே மிகுந்த கௌரவத்துடன் மதித்து வந்துள்ளது. ஒரு நாடு பெண்களை நடத்தும் விதம் அதன் உண்மையான வளர்ச்சியின் சமூக குறிகாட்டியாகும். இந்த விடயத்தில் இலங்கை ஏனைய பல நாடுகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்கிறது.

பெண் என்பவள் எந்தவொரு சமூகத்திலும் அதன் அடிப்படை அலகாக விளங்கும் குடும்பக் கட்டமைப்பின் அடித்தளமாக விளங்குகின்றாள். தனது வாழ்நாள் முழுவதும் பலவிதமான பாத்திரங்களை வகிக்கும் அவள், பல குடும்ப அலகுகள் இணைந்து உருவாகும் சமூகத்தை பிணைத்து வைத்திருப்பதில் ஒரு வலுவான பங்கை வகிக்கின்றாள்.

எப்போதும் பண அடிப்படையில் மதிப்பிடப்படாத போதும் தேசிய உற்பத்திக்கான அவளது பங்களிப்பு அதிக பெறுமதியுடையது என்பதை உறுதியாகக் கூறமுடியும். எனவேதான் பெண்களின் கண்ணியம், சமத்துவம் மற்றும் மகிழ்ச்சியைப் பாதுகாத்து போசிப்பது ஒரு சமூகப் பொறுப்பாகும்.

இன்று இலங்கையில் பொருளாதார, சமூக மற்றும் கலாசார வாழ்க்கையின் பல துறைகளில் பெண்கள் அதிக பிரதிநிதித்துவத்தைப் பெற்றுள்ளனர்.

இன்னும் பல துறைகளில் அவர்கள் ஆண்களுக்கு சவால் விடும் நிலையில் இருக்கின்றார்கள். இந்த வெற்றிபெண்ணின் அறிவாற்றல், தைரியம் மற்றும் அர்ப்பணிப்பைப் போன்றே எமது சமூகத்தின் சமூக நீதி மற்றும் முதிர்ச்சிக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும். அரசியல் துறையில் அவளது பங்கேற்பு இன்னும் அதிகரிக்கப்பட வேண்டும்.

'நாடும் தேசமும் உலகமும் அவளே' என்ற இந்த ஆண்டுக்கான சர்வதேச மகளிர் தின கருப்பொருள் காலத்துக்கேற்ற ஒரு கருப்பொருள் என நான் நினைக்கிறேன்.

பெண்களின் பங்கை சரியாக அடையாளம் கண்டிருக்கும் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனம், பெண்களின் சமூக மற்றும் பொருளாதார பங்களிப்பை மேம்படுத்துவதாக உறுதியளித்துள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள எட்டு அம்ச அணுகுமுறை இப்போது யதார்த்தமாகி வருகிறது. சர்வதேச மகளிர் தினத்துடன் இணைந்து கொள்ளும் எமது நாட்டின் பெண்களுக்கு எனது ஆசீர்வாதங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

## தீயிட்டு தற்கொலைக்கு மட்டு. பெண் முயற்சி!

மட்டக்களப்பு – காத்தான்குடி, நொச்சிமுனைப் பகுதியில் இளம் குடும்பப் பெண்ணொருவர் தீயிட்டு தற்கொலை செய்ய முயற்சித்து, அவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த சம்பவத்தில், நொச்சிமுனை – இசை நடனக்கல்லூரி வீதி, முதலாம் குறுக்கு வீதியிலுள்ள 27 வயதுடைய இளம் குடும்ப பெண்ணே படுகாயமடைந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

குறித்த பெண்ணுக்கும் அவரது கணவருக்குமிடையே ஏற்பட்ட குடும்பத் தகராறையடுத்து, நேற்றுப் பிற்பகல் 4.15 மணியளவில், அப்பெண், தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீயிட்டுக் கொண்டதில் படுகாயமடைந்துள்ளார்.

அதனையடுத்து உடனடியாக அவரை உறவினர்கள் மீட்டு, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்த்துள்ளனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அரசாங்கம் தனது பலவீனத்தை மறைத்துக்கொள்ள கொரோனா தாக்கத்தை சாதகமாக பயன்படுத்துகிறது!

### ரணில் குற்றச்சாட்டு



நாட்டின் தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்த அரசாங்கத்திடம் சிறந்த கொள்கை திட்டம் ஏதும் கிடையாது என்பதுடன் தனது பலவீனத்தை மறைத்துக் கொள்ள கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தை சாதகமாக பயன்படுத்திக் கொள்கிறது எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியுள்ளவை வருமாறு -

தேசிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயற்பாட்டின் விளைவை நாட்டு மக்கள் இந்த வருட இறுதியில் அறிந்துகொள்வார்கள்.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் பல இறக்குமதிகள் ஊடாக வரிச்சலுகை வழங்கியது. இதனால் சாதாரண மக்கள் பயன்பெறவில்லை. அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வர முன்னின்று செயற்பட்ட செல்வந்தர்கள் மாத்திரம் பயனடைந்தார்கள்.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்தில் 2010 தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அச்சிடாத அளவிற்கு நாணயங்களை அச்சிட்டுள்ளது.

இவ்வாறான தன்மை நாட்டின் நிதி நெருக்கடி நிலையை வெளிப்படுத்தியுள்ளது. தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்த அரசாங்கம் முறையற்ற பொருளாதார முகாமைத்துவக் கொள்கையைச் செயற்படுத்துகிறது.

நல்லாட்சி அரசாங்க காலத்தில் வகுக்கப்பட்ட புதிய பொருளாதார முகாமைத்துவ கொள்கைகள் அனைத்தையும் அரசாங்கம் நிராகரித்துள்ளது.

சிறந்த விடயங்களைச் செயற்படுத்தும் நோக்கம் அரசாங்கத்திடம் கிடையாது. சர்வதேசத்தில் அரச முறை கடன்களைப் பெற முடியாத அளவிற்கு அரசாங்கம் சர்வதேச மட்டத்திலும் முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளது. இவ்வாறான தன்மை பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்.

வேலையில்லா பற்றாக்குறை தோற்றம் பெற்றுள்ளது. வெளிநாட்டு முதலீடுகள் நாட்டில் தொழிற்துறையை மேம்படுத்த வேண்டும். ஆனால் தற்போது வெளிநாட்டு முதலீடுகளால் கூட இளைஞர் மற்றும் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறவில்லை.

அரசாங்கத்தின் பலவீனத்தன்மையை அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து சுட்டிக்காட்ட வேண்டும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ். செம்மணி இந்து மயானத்தில் ஆபத்தான வெடிமருந்து உள்ளது!

### எனத் தெரிவித்து படையினர் குவிப்பு





யாழ்ப்பாணம் - செம்மணி இந்து மயானத்தில் ஆபத்தான வெடிமருந்து உள்ளதாகத் தெரிவித்து அங்கு பாதுகாப்புக்காக சிறப்பு அதிரடிப்படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

நல்லூர் - செம்மணி வீதியின் வடக்கே உள்ள இந்து மயானத்தில் பை ஒன்றில் பொதி செய்யப்பட்ட நிலையில் ஆபத்தான வெடிமருந்து காணப்படுவதாக இராணுவ புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

மேற்படி தகவலின் அடிப்படையில், இன்று (திங்கட்கிழமை) அதிகாலை அந்தப் பகுதி சிறப்பு அதிரடிப்படையினரால் தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது.

இதனையடுத்து, குறித்த பையை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை அதிரடிப் படையினர் முன்னெடுத்துள்ளனர்.

மேலும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் இணைந்து முன்னெடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இதுவரை தடுப்பூசி பெற்றோர் 7 லட்சத்தையும் கடந்துள்ளது!

கொவேக்ஸ் திட்டத்தின் கீழ், 60 வயதிற்கு மேற்பட்டோருக்கு இன்று (திங்கட்கிழமை) முதல் தடுப்பூசி வழங்க ஆரம்பிக்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கொவேக்ஸ் திட்டத்தின் கீழ் நாட்டுக்கு வழங்கப்படும் 20 சதவீதமான தடுப்பூசிகள் நேற்று நாட்டை வந்தடைந்தன.

அதன்படி, கொவேக்ஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், சுகாதார அமைச்சுக்கு 14 லட்சம், அஸ்ட்ராசெனெக்கா தடுப்பூசிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இரண்டு லட்சத்து 64 ஆயிரம் தடுப்பூசிகள் நேற்று அதிகாலை இலங்கைக்கு கொண்டு வரப்பட்டன. இதேவேளை, நாட்டில் நேற்றைய தினம் மேலும் 5 ஆயிரத்து 284 பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. இதனையடுத்து, கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி முதல் இது வரையில் 7 லட்சத்து 29 ஆயிரத்து 562 பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழில் இளைஞன்மீது இராணுவம் தாக்குதல்!

யாழ்ப்பாணம் - சுன்னாகத்தில் இராணுவத்தினரின் தாக்குதலுக்கு இலக்கானதாக இளைஞரொருவர், சிகிச்சைக்காக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் இந்தச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றதாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

உடுவில் ஆலடியைச் சேர்ந்த சிவலிங்கம் கமில்தாஸ் (வயது -22) என்ற இளைஞரே இவ்வாறு சிகிச்சைக்காக தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வீதியால் மோட்டார் சைக்கிளில் பயணித்த இராணுவத்தினர், தன்னை வழிமறித்துத் தாக்கினர் என இளைஞர் வைத்தியசாலையில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.03.2021இல் வெளியிடப்பெற்றது.